**பெப்பர்ஸ்** டிவியில் ஒளிபரப்பாகி வரும் ஒரு சுவாரஸ்யமான நிகழ்ச்சி **30 MINUTES WITH US**. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் இரவு 7 மணிக்கு ஒளிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியில், திரைத்துறை உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்தவர்கள் தங்களின் வெற்றிப் பயணத்தையும், குறிக்கோள்களை அடைந்த விதத்தையும் விளக்குகின்றனர்.. தங்களின் பல வருட அனுபவங்களின் சுருக்கத்தை அரை மணி நேரத்தில் பங்கேற்பவர்கள் விளக்குவதே இந்த நிகழ்ச்சியின் சிறப்பு.



**30 MINUTES WITH US** நிகழ்ச்சியில் இதுவரை மைனா படத்தில் நடித்ததற்காக தேசிய விருது பெற்ற தம்பி ராமையா, பையா உள்ளிட்ட படங்களுக்கு ஒளிப்பதிவு செய்த ஒளிப்பதிவாளர் மதி, மௌனகுரு திரைப்படத்தின் நாயகன் அருள்நிதி, வெற்றிகரமாக

ஓடிக் கொண்டிருக்கும் வேட்டை படத்தின் வசனகர்த்தா பிருந்தா சாரதி ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.



இந்த வார **30 MINUTES WITH US** நிகழ்ச்சியில் கமல் நடித்த உன்னைப் போல் ஒருவன் படத்தில் நடித்த அனுஜா ஐயர் தனது திரை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார். MV 3 என்ற படத்தில் நடித்ததற்காக நியூயார்க் சர்வதேச திரைப்பட விழாவில் விருது பெற்றிருக்கிறார் அனுஜா ஐயர் என்பது குறிப்பிடத்தக்கது.



அனுஜா ஐயர் பங்கேற்கு இந்த நிகழ்ச்சி வரும் ஞாயிறு (05.02.2012) இரவு 7 மணிக்கு பெப்பர்ஸ் டிவியில் ஒளிபரப்பாகிறது..

Contact : Peppers TV @ 044 4906 7777